CS – 073

III Semester B.Com./B.B.A./B.H.M. Examination, March 2023
(CBCS) (2020-21 and Onwards) (Repeaters)
TAMIL LANGUAGE (Paper – III) (Part – I)

Time : 3 Hours Max. Marks : 70

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) கரந்தைத் திணை என்பது
   1) ஆநிரை கவர்தல் 2) ஆநிரை மீட்டல்
   3) ஆநிரை காத்தல் 4) ஆநிரை பங்கிடல்

2) நாலடியாரைத் தொகுத்தவர்
   1) நல்லாதனார் 2) விளம்பிநாகனார்
   3) முன்றுறையரையனார் 4) பதுமனார்

3) இலக்கிய மகரந்தத்தின் ஆசிரியர்
   1) கி.இராசா 2) வைரமுத்து
   3) க.இராமச்சந்திரன் 4) கண்ணதாசன்

4) திரிகடுகம் என்பது
   1) சுக்கு, மிளகு, திப்பிலி 2) மிளகு, பூண்டு, சீரகம்
   3) சுக்கு, மிளகு, வசம்பு 4) சுக்கு, ஓமம், வசம்பு

5) விளம்பிநாகனார் இயற்றிய நூல்
   1) நாலடியார் 2) பழமொழி நானூறு
   3) நான்மணிக்கடிகை 4) திரிகடுகம்

P.T.O.

II. விரிவான விடை தருக.

1) முயற்சி உடைமை குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து வரைக. 8

அல்லது

நான்மணிக்கடிகை கூறும் உண்மைகளை விளக்கி வரைக.

2) சாலியின் மகன் இளம்பூதியின் மகனான வரலாற்றை விளக்கி வரைக. 8

அல்லது

ஆபுத்திரனுக்கு நேர்ந்த கொடுமைகள் குறித்து விளக்குக.

III. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் 4

அல்லது

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமில்லா போழ்தத்து வள்ளன்மை குற்றம்

2) கோட்டினிற் குத்திக் குடர்புயத்து உறுத்துக்
காட்டிடை நல்லாக் கதழ்ந்து கிளர்ந்தோட 4

அல்லது

ஈன்ற குழவிக்கு இரங்கேன் ஆகித்
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்

IV. 'இலக்கிய மகரந்தம்' என்னும் நூலிலிருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விரிவான விடை தருக. (2×7=14)

1) சங்க இலக்கியங்களின் கவிதைக் கோட்பாடு.

2) சித்தர்கள் காட்டும் அன்பு நெறி.

3) புதிய யுகம் காட்டிய புலவன் பாரதி.

4) புதுக்கவிதை வளர்ச்சியில் மணிக் கொடிக் காலம்.

V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. (5×4=20)

1) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

2) சார்பெழுத்து என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறுக.

3) வேற்றுமை உருபுகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

4) காலவாகு பெயரை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

5) அகத் திணைக்குரிய முதற்பொருள் குறித்து எழுதுக.

6) வாகைத் திணை, பாடாண் திணை – இவற்றை விளக்குக.

7) எதுகைத் தொடை, மோனைத்தொடை – இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

8) எடுத்துக்காட்டுவமை அணியைச் சான்றுடன் புலப்படுத்துக.

VI. ஏதேனும் ஒன்றிற்குக் கோப்புத் தயார் செய்க. (1×7=7)

1) உங்கள் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழாவிற்காகப் போடப்பட்டிருந்த பந்தல் மற்றும் இருக்கைகளுக்காக பணம் செலுத்த வேண்டியதைக் குறித்து, மாணவர் சங்கத்தின் தலைவர் என்ற நிலையில், கல்லூரி முதல்வருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக.

2) நீங்கள் பணிபுரியும் ஆயத்த ஆடையகத்தில் உள்ள வேலைப் பளுவைச் சுட்டிக்காட்டி போதிய பணியாளர்களை நியமனம் செய்யுமாறு உதவி மேலாளர் என்ற நிலையில், அதன் நிர்வாக இயக்குநருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக.